

ஒன்றிய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அவர்களை நேற்று சந்தித்து, திருச்செந்தூர் செல்லும் பக்தர்களுக்கு நேரடிப் போக்குவரத்தை வழங்கும் தூத்துக்குடி – ஆறுமுகநேரி ரயில் பாதையை விரைந்து நிறைவு செய்யக் கோரும் கடிதங்களை கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி வழங்கி, மேலும், தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதியில் சாலை மேம்பாலங்கள் மற்றும் பாதுகாப்பான பாதசாரி கடப்புகள் உள்ளிட்ட உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுமாறும், பயணிகளின் வசதிக்காகத் தூத்துக்குடி – தாம்பரம் இடையிலான சிறப்பு ரயிலை தினசரி சேவையாக மாற்றியமைக்குமாறும் அமைச்சகத்தை வலியுறுத்தினார்.

## நியாயமான தொகுதி மறுசீரமைப்புதான் தி.மு.க.வின் கொள்கை

# சென்னையில் சொத்துவரி உயர்வை நிரந்தரமாக கைவிடாவிட்டால் தி.மு.க. சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

### அமைச்சர் நிர்மல்குமார் அவதூறு பேச்சுக்கு பதிலடி! – கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிக்கை!

**சென்னை, ஆக.15**

**பச்சையாகப் பொய் சொல்கிறார் நிர்மல் குமார் என்றும், RSS, BJPயில் இருந்த நிர்மல் குமாருக்கு மற்றவர்களைப் பற்றி பேச யோக்கியதை கிடையாது என்றும், சென்னையில் சொத்து வரி உயர்வை முழுமையாகக் கைவிடாவிட்டால் தி.மு.க. சார்பில் போராட்டம் நடைபெறும் என்றும் அமைச்சர் நிர்மல் குமாரது அவதூறு பேச்சிற்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி பதிலடி கொடுத்துள்ளார்.**

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

அமைச்சர் நிர்மல் குமாருக்கு வாயில் உண்மையே வராது. அதற்கு காரணம், அவர் ஆர்.எஸ்.எஸ்ஸில் இருந்தவர். RSS மற்றும் BJPயில் இருந்தவருக்கு மற்றவர்களைப் பற்றி விமர்சனம் செய்வதற்கு எந்த யோக்கியதையும் கிடையாது. நாங்கள் தொடக்கத்திலிருந்தே பாஜகவை எதிர்த்தவர்கள்; இன்றும்அதேநிலைப்பாட்டில்தான் இருக்கிறோம்.

நிர்மல் குமார் ஒவ்வொரு நேரத்திலும் ஒவ்வொரு மாதிரி பேசக்கூடியவர். அவர் ஆர்.எஸ்.எஸ்ஸில் இருந்தார், அதிமுகவில் இருந்தார்; இப்போது தவெக கட்சியில் இருக்கிறார். இன்னும் இந்த ஆட்சி முடிவதற்குள் அவர் எந்தக் கட்சிக்கு போவார் என்று தெரியவில்லை. புதுசாக தனுஷ் ஒரு கட்சி ஆரம்பிக்கப் போகிறார், அண்ணாமலை ஒரு கட்சி ஆரம்பிக்கப் போகிறார் என்றெல்லாம் பேசுகிறார்கள்.

இப்படிப் புதிதாக யார் கட்சி ஆரம்பித்தாலும், உடனே போய் முதலில் கையெழுத்துப் போட்டு உறுப்பினர் அட்டை வாங்கி வைத்துக் கொள்வது சிலருக்குப் பாரம்பரியமான பழக்கம். அதில் முதன்மையானவர்தான் இன்றைக்கு இருக்கக்கூடிய நிர்மல் குமார். அதேபோல ஆதவ் அர்ஜுனா போன்றவர்கள் எல்லா கட்சிக்கும் சுற்றி விட்டுப் போவார்கள். ஆகையினால், அவர்கள் வைக்கும் வாதம் சரியாக இருக்க



வேண்டும்.

கடந்த முறை பாராளுமன்றத்தில் தொகுதி மறுவரையறை மசோதா கொண்டுவரப்பட்டபோது, திமுகவால் தான் அது தோற்கடிக்கப்பட்டது. எங்கள் தலைவர் தளபதி அவர்கள் அன்று கருப்புச் சட்டை அணிந்து, அந்தச் சட்ட மசோதாவையே எரித்து எதிர்ப்பைப் பதிவு செய்தார். அதற்குப் பிறகுதான் அது தோற்கடிக்கப்பட்டது என்பது தான் உண்மை.

தி.மு.க. மிகத் தெளிவாகச் சொல்லிவிட்டது -நாங்கள் கொடுத்த சில திருத்தங்களை மசோதாவில் சேர்த்து வைத்தால், அதை ஆதரிப்பதா இல்லையா என்பதைப் பார்த்து தான் முடிவு செய்ய முடியும். ஆனால், இவர்கள் ஊழலை மறைப்பதற்காகத் திரும்பத் திரும்பத் திசை திருப்புகிறார்கள்.

கோவையில் மாணவர் கொலை சம்பவம் நடந்துள்ளது. அன்று தி.மு.க. ஆட்சியில் அண்ணா பல்கலைக்கழகத்தில் நடந்த சம்பவத்தில் 85 நாட்களுக்குள் தண்டனை பெற்றுத் தந்து தவறு செய்தவர்களை உள்ளே சிறைக்கு அனுப்பினோம். ஆனால், தூத்துக்குடி பெண் பாதிக்கப்பட்ட விவகாரத்தில், அவர்கள் கட்சியினரே சம்மந்தப்பட்டிருப்பதாக புகார் அளித்தும் 100 நாட்கள் ஆகியும் அதற்கு இன்னும் பரிகாரம் கிடைக்கவில்லை; கேசும் போடவில்லை, ஒன்றும் செய்யவில்லை.

நேற்று ஒரு மாநாடு நடந்தது. எவ்வளவு பெரிய மாநாடாக இருந்தாலும், 'நான்காவது தூண்' (Fourth Pillar) எனப்படும் பத்திரிகையாளர்களுக்கு முதல் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ஆனால், பத்திரிகையாளர்களையே உள்ளே விடவில்லை. அங்கு என்ன நடந்தது என்று யாருக்குமே தெரியவில்லை; முதலமைச்சரே பேசவில்லை. முதலீட்டாளர்கள் எல்லாம் வந்துவிட்டதாக இவர்கள் சொல்கிறார்கள். ஆனால், எங்கள் தலைவர் அன்றைக்குக் கொண்டுவந்து போட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், இரண்டாம் கட்டத்திற்கான தொகையைப் போட்டிருக்கிறார்கள்; அவ்வளவு தான்.

அப்படி இருக்கும்போது பத்திரிகையாளர்களை அனுமதித்தால் என்ன? மக்களுக்கு உண்மைகள் வெட்டவெளிச்சமாகத் தெரிந்துவிடும் என்பதற்காகவே இந்த ரகசியம். பத்திரிகையாளர்களையே அனுமதிக்காமல் ஒரு கூட்டத்தை நடத்துவது தமிழ்நாட்டிலேயே இதுதான் முதல் முறை.

அதேபோல, சென்னையில் சொத்து வரி/வீட்டு வரி பயங்கரமாக உயர்த்தப்பட்டுள்ளது. இன்றைக்குக் கார்ப்பரேஷனில் 'சுய மதிப்பீடு' (Self Declaration) மூலம் வரி போடுகிறார்கள். அபார்ட்மெண்டில் 50 வீடுகள் உள்ள இடத்தில் இரண்டு பேருக்குத் தான் மதிப்பீடு செய்தார்கள் என்று பச்சையாக பொய் சொல்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் தனித்தனி மதிப்பீடு மற்றும் பட்டா இருக்கும். அப்படி தவறாக இருந்தால் CMDA மூலம் அந்த கட்டடங்களை இடிக்க வேண்டியதுதானே? அந்த அதிகாரம் உங்களுக்கு இருக்கிறதே!

இப்படிப் பொய் பேசும் அமைச்சர்கள் தான் இன்றைக்கு இருக்கிறார்கள். நேற்றைய தினம் எங்கள் கட்சியின் தென்சென்னை மாவட்டச் செயலாளரும் முன்னாள் மேயருமான மா.சுப்பிரமணியம் கண்டன அறிக்கை வெளியிட்டு, மக்கள் மத்தியில் பெரிய கொதிப்பு ஏற்பட்ட பிறகு, தற்போது தற்காலிகமாக அதை நிறுத்தி வைப்பதாக சொல்கிறார்கள். நிரந்தரமான தீர்வை இவர்களால் சொல்ல முடியவில்லை. உள்ளாட்சித் துறை அமைச்சரும், அதிகாரிகளும் இதுபற்றி வாய் திறக்கவில்லை. இந்த வரி உயர்வைக் கைவிடாவிட்டால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மிகப்பெரிய ஆர்ப்பாட்டத்தை நடத்துவோம்.

தொகுதி மறுசீரமைப்பு (De limitation) மசோதாவைப் பொறுத்தவரை, திமுக 'Fair De limitation' என்ற நிலைப்பாட்டில்தான் இருக்கிறது. தமிழ்நாடு சட்டமன்றத்தில் முதலமைச்சர் கொண்டு வந்த தனித்தீர்மானத்தை திமுக ஏற்றுக்கொண்டது. நியாயமான தொகுதி மறுசீரமைப்பு என்பதுதான் எங்கள் கொள்கை. நாடாளுமன்றத்தில் சட்ட திருத்தம் கொண்டு வர வேண்டும் என்று சொன்னோம்.

அவர் சர்க்காரியா கமிஷனைப் பற்றியெல்லாம் பேசுகிறார்; அப்போது அவர் பிறந்திருக்கவே மாட்டார். சர்க்காரியா கமிஷனுக்குச் சவால் விட்ட ஒரே தலைவர் எங்கள் தலைவர் கலைஞர் மட்டும் தான். அதற்குப் பிறகு பல ஆண்டுகள் எம்.ஜி.ஆர் ஆட்சி நடந்தது; அவர்களால் ஒரு வழக்காவது போட முடிந்ததா? 2001இல் இரவோடு இரவாகக் கலைஞரைக் கைது செய்தார்களே, அதற்குப் பிறகு 15 ஆண்டுகள் அவர்கள் ஆட்சியில்தான் இருந்தார்கள்; ஒரு வழக்கையாவது நிரூபிக்க முடிந்ததா? இதெல்லாம் வரலாறு தெரிந்து பேச வேண்டும்.

அவர் நேத்துதான் கட்சி ஆரம்பித்து வந்திருக்கிறார். நான் விஜய்க்கு ஒரு அறிவுரை சொல்வதானால்—பல கட்சிகளுக்குச் சென்று வந்த இதுபோன்ற ஆட்களைத் தயவுசெய்து பக்கத்தில் சேர்க்காமல் இருப்பது அவருக்கு நல்லது. 'கூடா நட்பு கேடாய் முடியும்' என்பதைப் போல, இந்த ஆட்சிக்கு கேடு இவர்களால் தான் வரப்போகிறது.

இவ்வாறு அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## மாநிலத்தின் நிதிச் சுமையை அதிகரிக்கும் எம்.எம்.டி.ஆர்.

### சட்டத்திருத்த மசோதா மக்களவையில் நிறைவேற்றி 24 மணி நேரம் ஆகியும்

# முதல்வர் இன்னும் எத்தனை நாட்களுக்கு அமைதி காக்கப் போகிறார்?

### கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. ட்விட்டர் பதிவு!

சென்னை, ஆக. 15-

நாடாளுமன்ற கழகக்குழுத் தலைவரும் கழக துணைப் பொதுச் செயலாளருமான கனிமொழி கருணாநிதி ட்விட்டர் பதிவு வருமாறு:

ஆகஸ்ட் 10ஆம் தேதி அறிமுகப்படுத்தப்பட்ட MMDR சட்டத் திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு 24 மணி நேரம் கடந்துவிட்டது.

தமிழ்நாட்டைப் பொருளாதார இறையாண்மை கொண்ட மாநிலமாக மாற்றுவோம் என்று தேர்தல் வாக்குறுதி அளித்ததை மறந்துவிட்டதால் த.வெ.க. அரசு அமைதி காக்கிறதா?

இச்சட்டத் திருத்தம் மாநிலத்தின் நிதிச்சுமையை அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல், மாநில அரசின் அதிகார வரம்புக்குள் உள்ள நிலத்தின் மீது ஒன்றிய அரசு அதிகாரம் செலுத்த முயல்வதும் கூட்டாட்சித் தத்துவத்திற்கு முற்றிலும் முரணானது.

இவ்வளவு தீவிரமான ஒரு பிரச்சினை தொடர்பாக முதலமைச்சர் இன்னும் எத்தனை நாட்களுக்கு அமைதி காக்கப் போகிறார்?

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.


